بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

அனைத்து துறைகளும் தீர்ப்பு வழங்கும் போது தனது அனைத்து ஆற்றல்களையும் முழுமையாக பயன்படுத்தி விவகாரங்களை முழுமையாக சீர்தூக்கிப் பார்த்து நுட்பமாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்க வேண்டும்.

பொறுப்பாளர்களுக்கு மட்டுமே இது கடமையாகும் என்பதல்ல. ஒவ்வொரு அஹ்மதிக்கும் இதில் கடமை உள்ளது. ஒவ்வொரு அஹ்மதியும் தமக்கிடையிலான தொடர்புகளில் உயர்தரமான முன்னுதாரணங்களை வெளிப்படுத்த வேண்டும். நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்ய வேண்டும். தனது ஒழுக்கங்களை உயர்தரமானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

அவர்கள் லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 25.11.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத் தஅவ்வூத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள் :

நம்பிக்கையாளர்களே ! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக அமைந்தாலும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாக இருங்கள். யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ அவர் பணக்காரராயினும், ஏழையாயினும் சரியே. அல்லாஹ் அவ்விருவருக்கும் அதிக அளவில் நம்மையை விரும்பக் கூடியவன் ஆவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு அற்ப ஆசைகளை பின்பற்றாதீர்கள். நீங்கள் உண்மையை மறைத்தாலோ தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிகின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (4:136)

உலகப் பிரச்சனைகளுக்குரிய தீர்வு இஸ்லாமிய போதனைகளில் உள்ளது என்று நாம் உலகிற்கு கூறுகிறோம். அது தொடர்பான இஸ்லாமிய போதனைகளை எடுத்தும் வைக்கின்றோம். எனது கனடா சுற்றுப் பயணத்தின் போது இன்றைய உலகப் பிரச்சனைகளுக்கு நீங்கள் என்ன தீர்வு கூறுகின்றீர்கள் ? என்று ஒரு பத்திரிகையாளர் என்னிடம் கேட்டார். உலகவாதிகளாகிய நீங்களும் உலக வல்லரசுகளும் தத்தமது வட்டத்தில் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கும் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிளையும் செய்து விட்டீர்கள். ஆனால் பிரச்சனைகள் அப்படியே தான் இருக்கின்றன. ஓரிடத்தில் பிரச்சனைகள் குறைந்தால் மற்றொரிடத்தில் நெருப்பின் ஜுவாளை கொளுந்து விட்டு எரிகின்றது. அங்கு பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நீங்கள் முயற்சி செய்தால் பழைய இடத்தில் மீண்டும் குழப்பம் ஆரம்பமாகி விடுகின்றது. இந்த குழப்பங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அனைத்து உலகியல் முயற்சிகளும் செய்யப்பட்டு விட்டன. ஒரேயொரு முயற்சி மட்டும் இன்னும் செய்யப்படவில்லை. அது இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் அப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதாகும். இவ்வாறு பதிலளிக்கும் போது கேள்வி கேட்கும் நபர்கள் மௌனமாகி விடுகின்றனர்.

இந்த இஸ்லாமிய போதனைகளில் செயல் ரீதியான உண்மைத்துவம் இருக்குமென்றால் முதலில் இஸ்லாமிய நாடுகள் அதன்படி அமல் செய்யட்டும் என்று இதுவரை என்னிடம் எந்த பத்திரிகையாளரும் நேரடியாக கூறிவில்லை. ஆனால் அவர்களின் எண்ணங்களில் இந்ந கேள்வி கண்டிப்பாக எழலாம். நிச்சயமாக எழும். எனவே நான் பொதுவாக அந்நியர்களுக்கு மத்தியில் சொற்பொழிவாற்றும் போது அவர்களிடத்தில் முதலில் முஸ்லிம்களின் நிலையை எடுத்துரைத்து பின்னர் வல்லரசுகளின் அசல் நிலைகளை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றேன். பத்திரிகையாளர்களுக்கு முன்பு அல்லது நேர்காணலின் போது முஸ்லிம்கள் இஸ்லாமிய போதனையின்படி அமல் செய்யாமல் இருப்பதும் கூட இஸ்லாம் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கான சான்றாகும் என்று கூறுவதுண்டு. ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக கூறியிருக்கின்றார்கள்.

முஸ்லிம்களில் இதுபோன்ற நிலை ஏற்படும். அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் உண்மை நிலையை மறந்து விடுவார்கள். மேலும் அவர்கள் மன இச்சைகள் மற்றும் சுயநலனுக்கு முன்னுரிமை வழங்குவார்கள். இதுபோன்ற நிலை ஏற்படுகின்ற போது நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் தோன்றுவார். அவரை பற்றி திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர் தோன்றும் காலத்தின் அடையாளத்தைப் பற்றியும் திருக்குர்ஆன் கூறியுள்ளது. நபி (ஸல்) அவர்களும் அந்த அடையாளங்களை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

எனவே ஒரு அஹ்மதி முஸ்லிம் உலகின் இந்த நிலைகளைக் கண்டு கவலை கொள்வதற்கு பகரமாக ஒரு வகையில் மகிழ்ச்சியடைய வேண்டிய தருணமாகும். நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களைப் பற்றி செய்த முன்னறிவிப்புகள் குறிப்பாக அவர்களின் உலமாக்களைப் பற்றி செய்த முன்னறிவிப்புகள் முழுமையடைந்து விட்டன. நாம் அதற்கு சாட்சிகளாக ஆகிவிட்டோம். அஹ்மதி முஸ்லிம்களாகிய நாம் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின் ஒரு பகுதி நிறைவடைந்து விட்டது என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம். மேலும் நாம் நபி (ஸல்) அவர்களின் மற்றொரு பகுதி முன்னறிவிப்பை முழுமை செய்யக்கூடியவர்களாவும் இருக்கின்றோம் என்பதை எண்ணியும் மகிழ்ச்சியடைகின்றோம். அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபரை மேலும் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியை ஏற்றுக் கொண்ட மக்களாக நாம் திகழ்கின்றோம். அன்னாரின் மூலமாகவே இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குரிய காலகட்டம் ஆரம்பமாகி உள்ளது. ஆனால் இந்த விஷயம் மட்டும் நமது நோக்கத்தை அடைந்து விட்டவர்களாக நம்மை ஆக்கிவிடுமா ?

இது எப்படிப்பட்ட கேள்வி என்றால் இந்த கேள்வியை நம்மில் ஒவ்வொருவரும் சீர்தூக்கி பார்க்க வேண்டும். நான் தற்போது துவக்கத்தில் ஓதிய வசனத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்நியர்கள் முன் நிகழ்த்திய சொற்பொழிவில் ஓதி காட்டியுள்ளேன். இஸ்லாம் நீதியை நிலைநாட்டுவதற்காக எடுத்துரைக்கும் தரம் இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது என்றும் நான் அவர்களுக்கு கூறுகின்றேன். பெரும்பாலான மக்கள் அதைக் கேட்டு தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். தமது சொற்பொழிவுகளில் அதனை குறிப்பிடவும் செய்கின்றனர். அறிவார்ந்த ரீதியில் பிறரை தாக்கத்திற்கு உள்ளாக்குவது மட்டும் நமது பணியல்ல. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இஸ்லாமிய போதனைகளை நமது செயல் முன்மாதிரிகளாக வெளிப்படுத்திக் காட்டுவது அவசியமாகும்.

உங்களுக்கென ஒரு ஜமாஅத் அமைப்பு உள்ளது. நீங்கள் ஒரு ஜமாஅத்தாக இருக்கின்றீர்கள். நீங்கள் ஒரு தலைமையின் கீழ் செயல்படுவதாக வாதம் புரிகின்றீர்கள். உங்களுக்கிடையிலான தொடர்புகள் இருக்கின்றன. அவற்றில் நீங்கள் நீதி மற்றும் நேர்மையின் உயர் தரத்தை நிலைநாட்டுகின்றீர்களா ? என்று உலகம் நம்மிடம் கேட்கக்கூடும்.

அல்லாஹ் இந்த வசனத்தில் ஓரிடத்தில் கிஸ்த் என்ற சொல்லை பயன்படுத்தி இருக்கின்றான். மற்றொரிடத்தில் அத்ல் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளான். அதன் பொருள் சமத்துவம், முழுமையான நீதி, நல்லொழுக்கத்தில் உயர் தரம், ஒரு தரப்பிற்கு ஆதரவாக செயல்படுவதிலிருந்து முற்றிலும் தூய்மையாக இருத்தல் மற்றும் எந்த தாக்கத்திற்கும் உள்ளாகாமல் பணி செய்தல் போன்றவை ஆகும்.

இப்போது நம்மில் ஒவ்வொருவரும் இதனை ஆய்வு செய்வது அவசியமாகும். நாம் மேற்கூறப்பட்ட விஷயங்களை கருத்தில் கொண்டவாறு நமது விவகாரங்களில் நாம் செயல்படுகின்றோமா ? நாம் அந்த தரத்தை நிலைநாட்டுவதற்கு நமக்கெதிராக சாட்சி கூறுவதற்கு தயாராக இருக்கின்றோமா ? நாம் இந்த தரத்தை நிலைநாட்டுவதற்காக நமது பெற்றோருக்கு எதிராக கூட சாட்சி கூற தயாராக இருக்கின்றோமா ? நாம் அந்த தரத்தை நிலைநாட்டுவதற்காக நமது நெருங்கிய உறவினர்களுக்கு எதிராக கூட சாட்சி கூற தயாராக இருக்கின்றோமா ? இங்கு நெருங்கிய உறவினர்கள் என்பதில் முதலில் பிள்ளைகள் ஆவர். நாம் இந்த தரத்தை நிலைநாட்டுவதற்காக நமது மன இச்சைகளை வீழ்த்துவதற்குரிய தைரியம் மன உறுதி கொண்டுள்ளோமா ? செயல் ரீதியாக அதை நம்மால் நிரூபித்தும் காட்ட முடியுமா? என்று ஆய்வு செய்ய வேண்டும்.

இவையெல்லாம் சாதாரண விஷயங்கள் அல்ல. இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் இதற்குரிய முன்னுதாரனங்களை நமக்கு வெளிப்படுத்திக் காட்டிச் சென்றுள்ளார்கள். ஓரிடத்தில் ஒரு சம்பவம் வருகின்றது. அன்னாரின் தந்தையார் காதியானின் அந்த பகுதியின் தலைவராக இருந்தார்கள். ஒரு குடும்ப வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது குடும்பத்திற்கு ஏற்படும் பாதிப்பை பொருட்படுத்தாமல் எதிர்தரப்பிற்கு ஆதரவாக சாட்சி கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த சொத்திற்கு உரிமை படைத்தவர்களாக இருந்தார்கள். அந்த சொத்தில் பங்குதாரராக இருக்கின்றார்கள் என்பதை அந்த ஏழை மனுதாரர்கள் நன்கு அறிந்திருந்தும் நீதிமன்றத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சாட்சியின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும்படி கூறினார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எப்போதும் நீதி, நேர்மையில் நிலைத்திருந்து சாட்சி கூறுவார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த முன்னுதாரணத்தை தன்னை ஏற்றுக் கொண்ட மக்களிடமும் காண விரும்பினார்கள். ஏனென்றால், திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படக்கூடிய ஜமாஅத்தை அன்னார் உருவாக்க விரும்பினார்கள். அந்த ஜமாஅத்தின் நன்மையின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்றும் அன்னார் விரும்பினார்கள். எனவே தான் திருக்குர்ஆனின் முழுமையான ஆதிக்கத்தை தன்னுள் செயல்படுத்தி நம்மிடம் பைஅத் உடன்படிக்கையை வாங்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

எதிரி சமுதயாத்தின் மீதான பகைமை உங்களை நீதியிலிருந்து விலக்கி விட வேண்டாம். நீதியில் நிலை நில்லுங்கள். இதில் தான் இறையச்சம் உள்ளது. நான் மெய்யாகவே கூறுகின்றேன். எதிரிகளிடம் மென்மையாக நடந்து கொள்வது எளிதானதாகும். ஆனால் எதிரிகளின் உரிமைகளை பேணுவதும், வழக்குகளில் நீதி, நேர்மையை பாதுகாப்பதும் மிகவும் கடினமான காரியமாகும். மேலும் இது ஆண் மகனின் பணியாகும்.

கூறுகின்றார்கள் : பெரும்பாலான மக்கள் தமது எதிரிகளிடம் அன்பு காட்டுகின்றார்கள். இனிக்க இனிக்க பேசவும் செய்கின்றார்கள். ஆனால் அவர்களின் உரிமைகளை பறித்துக் விடுகின்றனர். ஒரு சகோதரர் மற்றொரு சகோதரரின் மீது அன்பு காட்டுகின்றார். அன்பு எனும் திரையில் பினனால் நின்று கொண்டு அவரை ஏமாற்றி உரிமைகளை பறித்துக் கொள்கின்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தினரின் தரம் மிக உயர்வானதாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள். தனது ஜமாஅத்தினரின் நிலை திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப இருக்க வேண்டுமெனவும் அன்னார் விரும்புகின்றார்கள். ஜமாஅத்தினர் பிறரின் உரிமைகளை பறிக்கக் கூடியவர்களாகவும், அநீதி இழைக்கக் கூடியவர்களாகவும் இருக்கக் கூடாது என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விரும்புகின்றார்கள். தீர்ப்பு வழங்கும் அதிகாரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டால் எல்லா தொடர்புகளிலிருந்தும் விலகி

நின்று தீர்ப்பு வழங்க வேண்டும். அந்த தீர்ப்பினால் தமக்கே பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே. அல்லது தமது பெற்றோர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே. அல்லது தனது நெருங்கிய உறவினர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே. ஆயினும் நீதியின் உயர்தரமான தரம் நிலைநாட்டப்பட வேண்டும். எதிர்காலத்தில் நாமே இந்த உலகத்தை வழிநடத்த நேரிடும் என்பதால் நாங்கள் இந்த முன்னுதாரனத்தை வெளிப்படுத்துகிறோம். இந்த முன்னுதாரனங்கள் இல்லை என்றால் அந்நிலையில் நாம் அல்லாஹ்வின் கட்டளைகளிலிருந்து விலகிச் சென்று நாம் செய்த உடன்படிக்கைக்கு மாற்றம் செய்து நம்பிக்கை துரோகம் செய்பவர்களாக நாம் இருப்போம்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியிடமும் நான் கூறுவேன். குறிப்பாக நான் ஜமாஅத் பொறுப்பாளர்களிடம் கூறுவேன். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தானே ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களுக்குரிய உரிமைகளை எந்த அளவிற்கு சரியாக ஆற்றி நீதியில் நிலைநிற்கின்றார்கள் என்பதை அவர்கள் ஆராய வேண்டும். அவர்களின் ஒவ்வொரு தீர்ப்பும் நீதியின் உயர் தரத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். நான் கனடாவிற்கு சென்றிருந்தேன். அங்கும் சில பொறுப்பாளர்கள் அல்லது எவர்களிடம் முறையான பொறுப்புகள் ஒப்படைக்கப்படாவிட்டாலும் அவர்கள் சில தொண்டுகளை ஆற்றி வருகின்றனர். அவர்களைப் பற்றி மக்களுக்கு அவர்கள் நீதியுடன் செயல்படுவதில்லை என சில முறையீடுகள் உள்ளன.

எனவே அனைத்து துறைகளும் தீர்ப்பு வழங்கும் போது தனது அனைத்து ஆற்றல்களையும் முழுமையாக பயன்படுத்தி விவகாரங்களை முழுமையாக சீர்தூக்கிப் பார்த்து நுட்பமாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்க வேண்டும். துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்விடத்தில் உதவி தேட வேண்டும். சரியான தீர்ப்பு கூறும் பாக்கியத்தை அல்லாஹ்விடத்தில் வேண்ட வேண்டும். எந்தவொரு தீர்ப்பு வழங்குவதற்கு முன்பும் துஆ கண்டிப்பாக செய்ய வேண்டும்.

அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனிலும் கூறுகின்றான் : தங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும் தம் உடன்படிக்கைகளையும் பேணி காப்பவர்களே நம்பிக்கையாளர் ஆவர்.

எவர்கள் முற்றிலும் அல்லாஹ்விற்காக மட்டுமே பணி செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்களோ அல்லது எவர்கள் நாங்கள் அல்லாஹ்விற்காக மட்டுமே நாங்கள் பணி செய்கின்றோம் என்று வாதிடுகின்றார்களோ அவர்கள் இந்த விஷயத்தில் எந்த அளவிற்கு விழிப்புடன் இருக்க வேண்டும். எவர்களிடத்தில் ஜமாஅத் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதோ அவர்கள் மற்ற நம்பிக்கையாளர்களை விட கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நான் தலைமையக பொறுப்பாளர்களுக்குத் தான் இவற்றை கூறிக் கொண்டிருக்கின்றேன் என்று எவரும் நினைத்து விட வேண்டாம். மாறாக, தலைவர்களுக்கும் மற்றும் அவர்களின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் கூட நான் கூறுகின்ற இந்த விஷயங்கள் பொருந்தும். அவர்கள் தம்மைத் தாமே ஆய்வு செய்ய வேண்டும்.

இது கனடாவுடன் தொடர்புடைய விஷயம் மட்டுமல்ல. ஜெர்மனியிலிருந்தும், லண்டனிலிருந்தும், உலகின் ஏனைய பல நாடுகளிலிருந்தும் எனக்கு இதுபோன்ற புகார்கள் வருகின்றன. எல்லா இடத்திலும் தனது நடைமுறைகளை சரி செய்து கொள்ள வேண்டிய அவசியமுள்ளது. இல்லையென்றால் நீதியின் தேட்டங்களை முழுமை செய்யாததன் காரணமாக அமானிதங்களையும் உடன்படிக்கைகளையும் பேணிக் காப்பவர்களாக இருக்க மாட்டீர்கள் என்பது மட்டுமல்ல. மாறாக, நம்பிக்கை துரோகம் செய்யக்கூடியவர்களாகவும் இருப்பீர்கள். நம்பிக்கை துரோகிகளை நான் விரும்புவதில்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். தொண்டுகளாற்றி நற்கூலி பெறுவதற்கு பகரமாக அநீதியிழைத்து அல்லது அகம்பாவமான நடைமுறையை வெளிப்படுத்தி அல்லாஹ்வின் கோபத்தை பெறக்கூடியவர்களாக ஆகி விடுவீர்கள். எனவே எங்கு தவறுகள் நடக்கின்றதோ அங்கு தவறுகளை மறைப்பதற்கு சாக்குப் போக்குகளை தேடுவதற்கு பகரமாக இஸ்திஃபார் செய்தவாறு தன்னை சீர்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, நமது ஜமாஅத் பொறுப்பாளர்கள் அல்லாஹ்வால் கூறப்பட்ட விதிகளுக்கேற்ப நீதியின் அனைத்து தேட்டங்களையும் நாம் முழுமை செய்கின்றோமா ? என்றும் தனது பணிகளிலும் நீதியுடன் நடந்து கொள்கின்றோமா ? என்றும் எவர்களுடன் தொடர்புகள் இருக்கின்றதோ அவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்கின்றோமா என்று ஜமாஅத் பொறுப்பாளர்கள் தம்மைத்தாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஜமாஅத் தலைவராகவோ, செயலராகவோ, அல்லது அமீராகவோ இருப்பது ஒரு பொருட்டே அல்ல. மேலும் இந்த பதவிகள் எவருக்கும் பாவமன்னிப்பை பெற்று தந்து விடாது. மேலும் இந்த பொறுப்புகளை வகிப்பது என்பது அல்லாஹ்வின் மீதும், அவனது ஜமாஅத்தின் மீதும் செய்கின்ற உபகாரமும் கிடையாது. இறைவன் விரும்புவதற்கேற்ப இவர்கள் தமது அமானிதங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் உரிமைகளை செலுத்தவில்லை என்றால் மேலும் பற்றுள்ளவர்களாக திகழ்ந்து பணியாற்றவில்லை என்றால் எந்த பயனும் இல்லை.

எனவே, ஒவ்வொரு பொறுப்பாளரும் தூய்மையானவர்களாக திகழ்ந்து அல்லாஹ்வுக்காக மட்டும் பணி செய்ய வேண்டும். தமது ஒவ்வொரு தீர்ப்பிலும் நீதியின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் முழுமை செய்ய வேண்டும். தவறான தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு விவகாரம் உங்களுக்கு முன்னால் வந்தால் நான் ஏற்கனவே கூறியது போன்று தவறை ஒப்புக் கொண்டு அந்த தீர்ப்புகளை சரி செய்யுங்கள். உங்களது ஒழுக்கங்களையும் சரி செய்து கொள்ளுங்கள்.

மேலும் வ கூலு லின்னாஸி ஹுஸ்னா அதாவது நீங்கள் மக்களுடன் மென்மையாக பேசுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையையும் கருத்தில் கொள்ளுங்கள். உயர்ந்த நல்லொழுக்கத்துடன் பேசுங்கள். நான் கூறியது போன்று உலகின் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பொறுப்பாளர்களும் தம்மைத் தாமே ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

பொறுப்பாளர்களுக்கு மட்டுமே இது கடமையாகும் என்பதல்ல. ஒவ்வொரு அஹ்மதிக்கும் இதில் கடமை உள்ளது. ஒவ்வொரு அஹ்மதியும் தமக்கிடையிலான தொடர்புகளில் உயர்தரமான முன்னுதாரணங்களை வெளிப்படுத்த வேண்டும். நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்ய வேண்டும். தனது ஒழுக்கங்களை உயர்தரமானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். தங்களுக்கிடையிலான விவகாரங்களில் ஒருதலைப்பட்சமாக எந்தவொரு வகையிலும் செயல்படுவதிலிருந்து முற்றிலும் தூய்மையானவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். எந்தவொரு பக்கமும் அவர்கள் சாய்ந்திருக்கக்கூடாது. அஹ்மதியின் சாட்சியும் கூற்றும் நீதி மற்றும் உண்மையின் முன்னுதாரனங்களாக இருக்க வேண்டும். அஹ்மதிகள் சாட்சி கூறியிருந்தால் அதற்கெதிராக முறையிடவே முடியாது என்று உலகம் கூற வேண்டும். ஏனென்றால் அந்த சாட்சிகள் நீதியின் உயர்தரத்தை எட்டியிருக்கும்.

நாம் இந்த நிலையை உருவாக்கி விட்டால் பின்னர் நாம் நமது சொற்பொழிவுகளில் நமது பேச்சுக்களில் நமது பிரச்சாரத்தில் நாம் உண்மையாளர்களாவோம். இல்லையென்றால் அந்நிலையில் மற்றவர்கள் எப்படியோ அப்படியே நாமும் இருப்போம். நாம் பைஅத் உடன்படிக்கையின் போது நாம் எல்லா தீமைகளிலிருந்தும் விலகி இருப்போம் என்று உடன்படிக்கை செய்திருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். உடன்படிக்கைகளை பேணாமல் இருப்பதும், வேண்டுமென்றே அதன்படி செயல்படாமல் இருப்பதும் நம்பிக்கை துரோகமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் அடையாங்களை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்.

ஒருவருடைய உள்ளத்தில் நம்பிக்கையும் நிராகரிப்பும் ஒன்றுபட முடியாது. உண்மையும் பொய்யும் ஒன்றுபடவே முடியாது. அதே போன்று அமானிதமும், நம்பிக்கை துரோகமும் ஒன்றுபட முடியாது.

மற்றொரு ஹதீஸில் அன்னார் கூறுகின்றார்கள். இதனை ஜமாஅத் பொறுப்பாளர்களும் கவனத்திற் கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு அஹ்மதியும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் :

மூன்று விவகாரங்களில் ஒரு முஸ்லிமின் உள்ளம் நம்பிக்கை துரோகம் செய்யாது. அந்த மூன்று விஷயங்கள் இதுவாகும். 1. அல்லாஹ்வின் பணிகளில் தூய்மையான எண்ணம் 2. எல்லா முஸ்லிம்களுக்கும் நன்மையை விரும்புவது. அனைவருக்கும் நன்மையை விரும்புவது. 3. ஜமாஅத்துல் முஸ்லிமீன்களோடு இணைந்திருப்பது.

நீதியின் தேட்டங்களை முழுமை செய்யும் நற்பாக்கியத்தையும் அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் வழங்குவானாக. ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் சாட்சி கூற வேண்டிய நிலை ஏற்பட்டால் ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்தல் கூடாது. ஜமாஅத்தின் ஒவ்வொரு பொறுப்பாளரும் தமது பொறுப்புகளை உணர வேண்டும். மேலும் தனது உடன்படிக்கை மேலும் அமானிதங்களை முழுமை செய்யக்கூடியவர்களாக திகழ வேண்டும். மேலும் தனது அனைத்து கடமைகளையும் நீதியின் தேட்டங்களை முழுமை செய்தவாறு செயல்படுத்த வேண்டும். இந்த அழகிய போதனை நமது சந்ததியிடமும் நிலைபெற வேண்டும். அதற்காக முயற்சியும் செய்ய வேண்டும். ஏனென்றால் அப்போது தான் நேரம் வரும் போது உண்மையான நீதியின் முன்னுதாரனங்களை நாம் உலகிற்கு வெளிப்படுத்திக்காட்ட முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நீதியை நிலைநாட்டினார்களோ அதனை நாம் நிலைநாட்ட வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் இக்காலத்தில் எந்த முன்னுதாரனங்களை நிலைநாட்டியுள்ளார்களோ அதனை நாம் நிலைநாட்ட வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் அந்த எதிர்பார்ப்பை வைத்துள்ளார்கள். அல்லாஹ் தஆலா நம் அனைவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா மதிப்பிற்குரிய அத்னான் முஹம்மது குர்தியா சாஹிப் அவர்களுடையதாகும். அவர் சிரியா நாட்டின் ஹலப் நகரை சார்ந்தவர் ஆவார். அவரை 2013 ஆம் ஆண்டில் சிரியாவில் ஒரு தீவிரவாத அமைப்பு கடத்திச் சென்றது. அதற்குப் பிறகு ஷஹீதாக்கி விட்டது. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இரண்டாவது ஜனாஸா மன்சூர் அஹ்மது சீமா காதியான் தர்வேஷ் அவர்களின் மனைவி மன்சூரா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். சிறிது காலம் நோயுற்றிருந்து நவம்பர் மாதம் 7 ஆம் தேதி 2016 ஆம் ஆண்டு 93 ஆம் வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மூன்றாவது ஜனாஸா காயிப் மதிப்பிற்குரிய ரானா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் லாஹூரைச் சார்ந்தவர். பிற்காலத்தில் இங்கு வந்து விட்டார். நவம்பர் 5 ஆம் தேதி 2016 ஆம் ஆண்டு 78 வது வயதில் வஃபாத்தாகி விட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

Friday Sermon Delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Masjid Baitul Futuh, London - on 25.11.2016
Tamil Translation : Moulavi. Abdur Rahman Tahir
Published By Nazarath Nashr-o-Isha'at, Sadr Anjuman Ahmadiyya Qadian - 143 516